SURESH' IAS ACADEMY
Right Choice for All Competitive Exams

# TNPSC Group I Mains - 2023

## GENERAL STUDIES (Original Question Paper)
## பொது அறிவு (அசல் வினாத்தாள்)

## TNPSC Group II/IIA Mains - 2023

**Exam Date - 25.02.2023**

**Part - A/பகுதி – அ** **(15 x 6 = 90)**

**Note: i) Answer not exceeding 50 words each.**

**ii) Each question carries six marks**

**iii) Answer any fifteen questions out of eighteen questions in section I & II**

**குறிப்பு:i) ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

**ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு மதிப்பெண்கள்**

**ii) பிரிவு I மற்றும் பிரிவு - IIஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள பதினெட்டு வினாக்களில் எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

**Section - I/ பிரிவு – I**

1. Write about the impact of Covid 19 in Environment.

   சுற்றுச்சூழலில் கோவிட் 19 ஏற்படுத்திய தாக்கம் பற்றி எழுதுக

2. Define the following

   a) Endangered (E)

   b) Vulnerable (V)

   c) Threatened (T)

   பின்வருவனவற்றை வரையறுக்கவும்

   a) அருகிவரும் (அழிந்து வரும்)

   b) பாதிக்கப்படக் கூடிய

   c) அச்சுறுத்தலுக்கு உட்பட்ட

3. What are the challenges and bottlenecks faced by Indian electricity sector?

   இந்திய மின்சாரத்துறை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இடையூறுகள் என்ன?

4. Which are the Coastal regions of India are under threat due to rising in sea level.

   இந்தியாவில் எந்தெந்த கடற் பகுதிகள் கடல் மட்ட உயர்வினால் பாதிப்புக்கு உள்ளாகும்.

5. Discuss and write the relative order of acid strength of the following oxyacids in the ascending order :

   a) $HClO$, $HClO_2$, $HClO_3$ and $HClO_4$

   b) $HNO_3$, $HNO_2$ and $HNO$

   பின்வரும் ஆக்ஸி அமிலங்களின் அமில வலிமையின் ஒப்பீட்டு வரிசையை ஏறுவரிசையில் எழுதி விவாதிக்கவும்.

   a) $HClO$, $HClO_2$, $HClO_3$ மற்றும் $HClO_4$

   b) $HNO_3$, $HNO_2$ மற்றும் $HNO$

6. List out the role of FAO, WHO and UNICEF towards human welfare.

   உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதி அமைப்புகள் மனித நலத்திற்கு ஆற்றிடும் பங்கினை விவரி

7. Mention the risks associated with Genetic Engineering of microbes to the environment.

   மரபு பொறியியலால் மாற்றப்பட்ட நுண்ணுயிர்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் ஆபத்துக்களை விளக்குக.

8. Write short notes on the following:
   a) Biojet Fuel
   b) Electronic Voting Machine

   பின்வருவனவற்றை பற்றிய சிறு குறிப்புகள் எழுதுக.

   a) உயிரி – ஜெட் எரிபொருள்
   b) மின்னணு வாக்களிக்கும் இயந்திரம்

9. Write about the role of the following:
   a) Atomic Power Station, Kalpakkam
   b) Mission Shakthi

   பின்வருவனவற்றின் பங்கு குறித்து எழுதுக.

   a) கல்பாக்கம் அணுமின் நிலையம்
   b) "திட்டம் சக்தி" எனும் மிஷன் சக்தி

**Section - II/பிரிவு – II**

10. Why Micro Labs Ltd was in news in 2022?

    மைக்ரோ லேப்ஸ் லிமிடெட் 2022-ல் செய்திகளில் ஏன் வந்தது?

11. What is the aim of Digital Ecosystem for skilling and Livelihood the DESH - stack e-portal?

    தொழில் திறன் மற்றும் வாழ்வாதாரத்திற்கான டிஜிட்டல் சூழல்சார் அமைப்பின் தேஷ் – ஸ்டாக் இ – போர்ட்டல் நோக்கம் என்ன?

12. Discuss in detail Digital Transformation in Indian Agri sector

    இந்திய விவசாயத் துறையில் மெய்நிகர் மாற்றம் குறித்து விரிவாக விவாதிக்கவும்

13. Explain the various schemes for Socio Economic Development of SC & ST Community in Tamilnadu

    தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி சமூகத்தின் சமூக – பொருளாதார வளர்ச்சிகான பல்வேறு திட்டங்களை விளக்கவும்

14. List out the important legislative measures initiated so far as well as the institutional structures established to tackle the menace of corruption in India.

    ஊழல்களுக்கு எதிராக இந்தியாவில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் அவற்றைத் தடுக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மற்றும் விசாரணை அமைப்புகளையும் பட்டியலிடுக.

15. In disaster management the role of cooperative federalism is crucial. How far the principles of cooperative federalism were incorporated in the recent COVID 19 disaster management? Evaluate their outcomes

    பேரிடர் மேலாண்மையில் கூட்டுறவுக் கூட்டாட்சியின் பங்கு இன்றியமையாதது ஆகும். சமீபத்திய கோவிட் 19 பேரிடர் மேலாண்மையின் போது கூட்டுறவுக் கூட்டாட்சியின் கொள்கைகள் எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டன? அவை ஏற்படுத்திய விளைவுகள் என்ன என்பதைக் குறித்து மதிப்பீடு செய்க.

16. Explain Civil Services Day.

    சிவில் சர்வீஸ் தினத்தை விளக்குக.

17. What are the sociological factors that lead to domestic violence?

    குடும்ப வன்முறையின் சமூகவியல் கோட்பாட்டை விளக்குக.

18. Briefly explain the following basic elements of Networking :
    a) Network services
    b) Transmission media
    c) Protocols

    பின்வரும் வலைப்பின்னலின் அடிப்படைக் கூறுகளை சுருக்கமாக விவரி.

    a) நெட்வொர்க் சேவைகள்
    b) பரிமாற்ற ஊடகம் (Transmission media)
    c) நெறிமுறை

SURESH'

**Part - B/பகுதி – ஆ** **(10 x 12 = 120)**

**Note: i) Answer not exceeding 150 words each.**

**ii) Each question carries twelve marks**

**iii) Answer any ten questions out of twelve questions.**

**குறிப்பு:i) ஒவ்வொரு வினாவிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

**ii) ஒவ்வொரு வினாவிற்கும் பன்னிரெண்டு மதிப்பெண்கள்**

**ii) கொடுக்கப்பட்டுள்ள பன்னிரெண்டு வினாக்-களில் எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

19. Write a note on the following :

a) Chief Minister's Breakfast Scheme

b) Green Tamil Nadu Mission

c) The Nilgiri Tahr Project.

கீழ்வருவனவற்றை பற்றி குறிப்பு வரைக:

a) முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

b) பசுமை தமிழ்நாடு இயக்கம்

c) நீலகிரி வரையாடு பாதுகாப்பு திட்டம்

20. Discuss the principles of Budgeting

வரவு செலவுத் திட்டத்தின் கொள்கைகளை விவாதி

21. Explain in detail :

a) Incredible India

b) Pradhan Mantri Ujjwala Yojana (PMUY)

c) India's Target for $ 5 Trillion Economy

விரிவாக விளக்குக :

அ) வியத்தகு இந்தியா

ஆ) பிரதான மந்திரி உஜ்வாலா யோஜனா

இ இந்தியாவின் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு

22. Analyse the advantages and disadvantages of State Control over the Hindu temples.

இந்துக் கோவில்களின் மீதான மாநில அரசின் கட்டுப்பாடு சார்ந்த நிறைகள் மற்றும் குறைகளை பகுப்பாய்க.

23. Already there is a District Rural Development Agency that looks after development administration at district level. However, yet another organization called District Development Coordination and Monitoring Committee has been created. Explain the rationale behind it and distinguish the new organisation from the earlier one.

ஏற்கனவே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை எனும் அமைப்பு மாவட்ட அளவிலான வளர்ச்சித் திட்டங்களைக் கவனித்து வருகிறது. இருந்தும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு எனும் புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கான காரணங்களை விளக்கி இப்புதிய அமைப்பை முந்தைய அமைப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டவும்.

24. Explain how Tamil Nadu bagged National Krishi Karman Award for five times?

தமிழ்நாடு எப்படி ஐந்து முறை தேசிய கிருஷி கர்மன் விருதை வென்றது என்பதை விளக்குங்கள்.

25. Examine on Child Welfare activities in India

இந்தியாவில் உள்ள குழந்தை நலன்புரி நடவடிக்கைகளை ஆய்வு செய்க.

26. Write a note on Industrial Corridors of Tamil Nadu.

தமிழ்நாட்டின் தொழில்வளச் சாலைகள் குறித்து ஒரு குறிப்பு எழுதுக.

SURESH'

27. What are 'B' Complex Vitamins? Enumerate the biological functions of these vitamins. Why are B-Complex vitamin essential?

வைட்டமின் 'B' கூட்டுத்தொகுதி என்பவை யாவை? அதன் பல்வேறு உயிரியல் பணிகளை விளக்குக. வைட்டமின் 'B' கூட்டுத்தொகுதி ஏன் முக்கியத்துவம் வாய்ந்துள்ளது?

28. "International Year of Millets 2023" - Discuss

"சர்வதேச சிறுதானியங்கள் வருடம் 2023" – விவாதி

29. What is graphene and who discovered it? Explain in detail the latest applications of graphene?

கிராஃபீன் என்பது யாது மற்றும் அதனை கண்டுபிடித்தவர் யார்? கிராஃபீனின் தற்போதைய பயன்பாடுகளை விரிவாக விளக்குக.

30. Identify the relations among the appropriate physical quantities governing the following situations and explain the principle behind them. Where are these situations employed?

a) The flow of water through a cylindrical tube of varying diameter?

b) The flow of current through copper wires of different diameters.

பின்வரும் சூழல்கள் அல்லது அமைவுகளை ஆட்கொள்ளும் உரிய இயற்பியல் அளவீடுகளுக்கான தொடர்புகளைக் கண்டறிந்து அவற்றிற்கு பின்னால் அமைந்துள்ள தத்துவத்தை விளக்குக. இத்தகைய அமைவுகள் எங்கு பயன்பாட்டில் உள்ளன?

a) மாறிக்கொண்டிருக்கும் விட்டத்தைப் பெற்றுள்ளதொரு உருளை வடிவ குழாய் வழியேயான நீரின் பாய்வு.

b) வேறுபட்ட விட்டங்களைப் பெற்றுள்ள தாமிரக் கம்பிகள் வழியேயான மின்னோட்டப் பாய்வு.

**Part - C/பகுதி – இ** **(6 x 15 = 90)**

**Note: i) Answer not exceeding 250 words each.**

**ii) Each question carries fifteen marks**

**iii) Answer any six questions out of eight questions.**

**குறிப்பு:i) ஒவ்வொரு வினாவிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

**ii) ஒவ்வொரு வினாவிற்கும் பதினைந்து மதிப்பெண்கள்**

**ii) கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களில் எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

31. How Dravidian Languages identity sets apart as distinct languages from other Indian Languages?

திராவிட மொழிகளின் அடையாளம் எவ்வாறு மற்ற இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்ட மொழிகளாக அமைகிறது?

32. Analyse the role of India in Global Climate Change

உலகளாவிய காலநிலை மாற்றத்தில் இந்தியாவின் பங்கை பகுப்பாய்வு செய்க.

33. Write a note on various steps taken by the Government of India to tackle the challenges of climate change

பருவ நிலை மாற்றத்தினால் ஏற்படும் சவால்களை கையாளுவதற்காக இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து குறிப்பு வரைக.

34. Elaborate the various institutional frameworks erected to address the issues in public life relating to probity and corruption in India

இந்தியாவில் பொதுவாழ்வில் உள்ள நன்னடத்தை மற்றும் ஊழல் தொடர்பானப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக நிறுவப்பட்டுள்ள அமைப்பு சார்ந்த பல்விதக் கட்டமைப்புகளை விவரிக்கவும்

35. Explain the origin and functions of Central Institute of Classical Tamil.

செம்மொழி தமிழ் மைய நிறுவனத்தின் தோற்றம் மற்றும் செயல்பாடுகளை விளக்கவும்

36. Explain the characteristics of third sectors and analyse its role in providing healthcare services in the country.

மூன்றாவது துறைகளின் பண்புகளை விளக்கி, நாட்டில் சுகாதார சேவைகளை வழங்குவதில் அதன் பங்கை பகுப்பாய்வு செய்யுங்கள்

37. Describe in details on various industrial problems of India.

இந்தியாவின் பல்வேறு தொழில்துறையில் ஏற்படும் பிரச்சினைகளை விரிவாக விளக்குக

38. Explain about "Tamil Nadu ICT Policy" (Information Communication Technology).

தமிழ்நாடு ICT கொள்கையை விளக்குக.